# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 25
# மேற்சான்றிதழ்க் கல்வி – நிலை 2 (HG20)

## ஜூலை – ஆகஸ்ட் 2025

**நேரம் : 2.30 மணி நேரம்** **மதிப்பெண் : 75**

### பிரிவு – 1

**I. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
*Answer all questions in a word / line.* **(10x1 = 10)**

1. இராமலிங்க அடிகள் எழுதிய பாடல்கள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
2. கா. நமச்சிவாயர் நடத்திய இதழின் பெயர்?
3. கண்ணதாசன் பிறந்த ஊர்?
4. திருக்குறள் எந்தத்தொகை நூல்களுள் அடங்கும்?
5. முல்லைக்கொடிக்குக் கொடுக்கப்பெற்றது எது?
6. கம்பர் தம் நூலுக்கு இட்ட பெயர் எது?
7. கைக்கிளை என்றால் என்ன?
8. அலர் என்றால் என்ன?
9. செயலை மட்டும் குறிப்பிடும் பெயர்?
10. பெருமை + ஊர் = சேர்த்து எழுதுக

### பிரிவு – 2

**II. எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
*Answer any ten questions in three lines each.* **(10x2=20)**

1. அபிராமி அந்தாதி எந்த வகைக் கடவுள்? எந்த வகை இலக்கியம்?
2. ஓடிக்கொண்டே இருப்பது எது.?
3. பாரதியார் எங்கே பிறந்தார்?
4. சுரதா என்பதன் விரிவு என்ன?
5. செய்தே அழிய வேண்டியது எது?
6. தொடர்வண்டிக்கு எஞ்சின் எதைப்போன்றது?
7. பாரதிதாசன் இயற்றிய நூல்கள் ஏதேனும் இரண்டு எழுதுக?
8. வாழ்க்கையாகிய கடலைக் கடக்க எது தேவைப்படுகிறது?
9. திருவேங்கட மலையின் இயற்கைக் காட்சியைக் கூறுக?
10. பல தெய்வங்கள் கொண்டதால் ஏற்பட்ட தீமையைக் கூறுக? ??
11. இந்திய நாட்டுக் கொடியிலுள்ள மூன்று வண்ணங்கள் யாவை?
12. குழந்தை தடுமாறி விழுந்து கிடந்ததைப்போல எது கிடந்தது?
13. இசுலாம் தோன்றக் காரணம் என்ன?.
14. மேற்கு + நாடு என்பது எவ்வாறு வரும்?

15. ஆசிரியப்பாவின் ஓசை என்ன?

### பிரிவு – 3

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**

*Answer any five questions in six sentences each.* **(5x4=20)**

1. நிலவைவிடச் சான்றோர் உயர்ந்தவராவது யாங்கனம் ?
2. நாய் பெற்ற தேங்காயை விளக்குக ?
3. அன்பின் ஆழத்தையும் உயரத்தையும் குகன் எதனைக் கொண்டு உணர்த்தி விடுகிறான் ?
4. இறை உணர்வு எதைத் தரும்?
5. பெரியாரைப் பற்றி வ.உ.சி கூறிய கருத்து என்ன?
6. வெற்றி யாருக்கு? என்ற கதையில் உன் மனம் விரும்பிய பாத்திரம் எது?
7. அளபெடையின் வகையைக் கூறுக?
8. இல்லாததை ஒப்புமை ஆக்குவது எந்த அணி?

### பிரிவு – 4

**IV. ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**

*Answer any one of the following questions in fifteen sentences.* **(1x10=10)**

1. பழமொழி நானூறு பாடத்தில் இடம்பெற்ற கருத்துகளைத் தொகுத்து எழுதுக .
2. வினா வகைகள் குறித்து எழுதுக?
3. இன்பம் என்னும் பாடலில் இடம்பெற்ற கவிஞர் சுரதாவின் கருத்துகளை உம் பாட வழி விளக்குக.

### பிரிவு – 5

**V. ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**

Write an essay in three pages to any one of the questions. **(1x15=15)**

1. இக்கால இலக்கியத்தில் பாரதியார் குறிப்பிடும் சுதந்திர தேவி பற்றி விரிவாக எழுதுக.
2. வாக்கியம் என்றால் என்ன? அவற்றின் வகைகளை மனைவரைபடம் மூலம் விளக்குக.

.........